1982 மார்ச் 2]

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

*வினா எண். 320—திரு ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது?

(இ) ஏந்தெந்த மாவட்டங்களில்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இலங்கை யிலிருந்து 90,373 குடும்பங்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

(ஆ) இதுவரை 16,533 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, அந்தமான் ஆகிய இடங்களிலும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. டி. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான பிரஜைகள் இலங்கையிலிருந்து திரும்பியவர்கள் இன்றைக்கு வீடில்லாமலும் வேலையில்லாமலும் அலைந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு வேலையும் குடியிருக்க வீடும் கொடுக்கின்ற முறையில் கூடலூரிலே கார்ப்பரேஷன் அமைத் திருப்பதைப் போல் வால்பாறை பகுதியிலே இருக்கக்கூடிய மலைப்பகுதிகளிலும் அப்படிப்பட்ட ஒரு கார்ப்பரேஷன் அமைத்து, இந்த இலங்கையிலிருந்து திரும்பிய மக்களுக்கு வேலை வாய்ப்பும் குடியிருக்க வீடும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் எல்லா மாவட்டங்களிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தேயிலை, ரப்பர் சின்கோனா தோட்டங்களிலும் மாநிலப் பண்ணைக் கழகத்தி லும்கூட அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். குடும் பத்தில் 2 பேர்கள் வீதம் எல்லா குடும்பங்களுக்கும் எல்லா மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. டி. கருப்பையா :** அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் எல்லா மாவட்டங்களிலும் எல்லாக் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்ப தாக. ஆனால் குறிப்பாக நான் சொல்ல விரும்புவது என்னு டைய வால்பாறை பகுதியில் இப்படி தாயகம் திரும்பியவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, தனியாக தோட்டக் கார்ப்பரேஷன் ஒன்றை ஏற்பாடு செய்து, வேலை இல்லாமல் இருக்கக்கூடிய அந்த ஜனங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும், வேலையில்லாமல் இருக்கும் நபர்களைப் பற்றிய குறிப்புகளை என்னிடம் தந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்கான ஏற்பாடு களைச் செய்ய முடியும்.

**திரு. மு. அரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களில் பெரும்பாலோர்கள் மலைப்பகுதியான நீலகிரிக்குத்தான் வருகிறார்கள். அந்தப் பகுதியில் வேலைவாய்ப்பு அதிகமாக இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே அவர்களுக்கு நிரந்தரமாக வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**செல்வி ப. விசயலட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் அவர்களில் ஒரு சிலர் இன்றும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 2]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி இலங்கையிலே இருந்து தாயகம் திரும்பியவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட வாரியாக கேட்கப்பட வில்லை. ஆகையினால் சேலத்தைப்பற்றிய குறிப்பை, தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க் கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

விடுதி வளாகத்தில் மன்ற உறுப்பினர் தாக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று பேரவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கிணங்க, மாண்புமிகு உறுப் பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்த பிரச்னையைப் பேரவையில் எப்படி எடுத்துக்கொள்வது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு கூடி ஆராய்ந்தது. அங்கே எடுக் கப்பட்ட முடிவின்படி, அப்பிரச்னை குறித்து கொடுக்கப் பெற்றுள்ள உரிமை மீறல் அறிவிப்பை எடுத்துக்கொள்கிறேன்.

பேரவையின் 245-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் ஒரு முன்னறிவிப்பு கொடுத்து இருக்கிறார். அவ்வறிவிப்பை நான் அனுமதித்தபடி, பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

பேரவையின் 250-வது விதிக்கிணங்க அவ்வறிவிப்பை பேர வைக்கு நான் படித்துவிடுகிறேன்.

"1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26 ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பின்பு நான் எனது சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் தங்கிவிட்டு, இரவு சுமார் 8-30 மணி அளவில் நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரமூர்த்தி மற்றும் இரண்டு நண்பர்களுடன் வெளியில் சாப்பிடச் சென்றுகொண் டிருக்கையில் என்னைக் கொலை செய்யும் நோக்கத்தோடு சிலர் என்னுடைய பின்புறமாகக் கழுத்தில் இறுக்கமாகப் பிடித்துக் கீழே தள்ளி இரும்புப் பூண் போட்ட தடியாலும், பயங்கர ஆயுதங்களாலும் தாக்கினார்கள். அதனால் எனக்குக் கழுத்து மற்றும் உடம்பெல்லாம் பல பாகங்களில் காயங்கள் ஏற்பட்டது.